RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s860

OPEN ACCESS

# பா. ஜெயப் பிரசாசம் சிறுகதைகள் வெளிப்படுத்தும் வறுமைநிலை

**ந. செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சுப்புலட்சுமி லட்சுமிபதி அறிவியல் கல்லூரி, மதுரை-625022, தமிழ்நாடு, இந்தியா.

# The Poverty that is revealed in the Short Stories of Pa. Jayaprakasam

**N. Selvi** [a, *]

[a] Department of Tamil, Subbalakshmi Lakshmipathy College of Science, Madurai-625022, Tamil Nadu, India

* Corresponding Author: sriselvi80@gmail.com

Received: 13-04-2021
Revised: 19-06-2022
Accepted: 22-06-2022
Published: 20-08-2022

Check for updates

**ABSTRACT**

Poverty is deadly. It can be said that poverty is coupled with Karisal's life. A man always has to fight with society for his economic upliftment. The Karisal region is sky-seeing earth known for its drought, heat, and mirage. Therefore, poverty and persecution are related phenomena that rob human life. Drought occurs due to poverty. As a result, agriculture does not take place. Poverty is caused by economic problems. Due to this, the local community is also seen as being full of problems. In this study, we will examine the sufferings of people due to the poverty that Pa. Jayaprakasam has created in his stories.

**Keywords:** Pa Jayaprakasam, Poverty, Karisal, Local community

## முன்னுரை

வறுமை என்பது மிகக் கொடியது.வறுமையோடு இணைந்தது தான் கரிசல் வாழ்க்கை எனலாம். மனிதன் எப்போதும் தன்னுடைய பொருளாதார ஏற்றத்துக்காக சமுதாயத்தோடு போராடிக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. "கரிசல் வட்டாரம் என்பது வறட்சிக்கும் வெக்கைக்கும் கானலுக்கும் பெயர் பெற்ற வானம் பார்த்த ப+மியாகும். எனவே வறுமையும் இம்சையும் மனித வாழ்வைச் சூறையாடுவது ஒரு தொடர்பான நிகழ்வே?" என்று கூறுகிறார் (Dasan, 1987).

வறுமையின் காரணமாக வறட்சி ஏற்படுகிறது. இதனால் உழவுத்தொழில் நடை பெறுவதில்லை. பொருளாதாரப் பிரச்சனையால் வறுமை ஏற்படுகிறது. இதனால் இப்பகுதிச் சமூகமும் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகிறது. வறுமையால் மக்கள் படும் துன்பங்களை பா.ஜெயப் பிரசாசம் தம் கதைகளில் படைத்துள்ளதை இவ்வாய்வில் ஆய்வோம்.

## வறுமைநிலையைச் சித்திரிக்கும் கதைகள்

1. மூன்றாம் பிறையின் மரணம்
2. பொய்மலரும்
3. சரஸ்வதியின் மரணம்
4. கொசு வலைக்குள் தேனீக்கள்

ஆகிய கதைகளின் மூலம் வறுமைநிலையையும் வறுமையால் ஏற்படும் சிக்கலைக் கீழ்கண்டவாறு பகுக்கலாம்.

- வறுமையால் சிறுவர் மனம் பாதிக்கப்படுதல்

- உழைப்பவர்களின் வறுமைநிலை
- பொருளாதார பற்றாக்குறை
- ஏழ்மையிலும் மனஉறுதி

## பசிப்பிரச்சனை

சமூகத்தில் ஒரு வேளைச் சோற்றுக்கு வழி இல்லாமல் இறப்பவர்களைக் காண முடிகிறது. பசிப்பிரச்சனை என்பது அன்று நேற்று இருப்பதன்று.தொன்றுதொட்டே சமுதாயத்தில் இருந்து கொண்டிருக்கும் ஒரு நோய்.

பசிப்பிணி பற்றி

“குடிபிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்வி பெரும் புனைவிடும்

நானனிகளையும் மானெழில் சிதைக்கும்

பசிப்பிணி என்னும் பாவி”

என்கிறது (Chithalai Chathanar, 1977).

ஒரு வேளை உணவு கூட இல்லை என்ற நிலையில் உள்ளவர்களை பாரதியார்,

“கஞ்சி குடிப்பதற்கிலார் அதன்

காரணங்கள் இவையென்றும் அறிவுமிலார்

பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்

பரிதவித்தே உயிர் துடிதுடித்து

துஞ்சி மடிகின்றாரே சிலர்

துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையோ”

என்று அவர் கூறும் கருத்து இன்றைய சமுதாயத்திற்கு பொருந்துவனவாய் உள்ளன (Bharathiyar, 1977).

## வறுமையால் சிறுவர் மனம் பாதிக்கப்படுதல்

‘இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்’ என்று பாடினார் பாரதியார். ஆனால் சுதந்திர இந்தியாவில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது வறுமை ஒன்று தான். வறுமையின் காரணமாக சிறுவன் மனம் பாதிக்கப்படுவதை ‘மூன்றாம் பிறையின் மரணம்’ என்ற கதை விளக்குகிறது. அழகர்சாமியும் மற்ற நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்து நிலாச்சோறு சாப்பிடுகின்றனர். அனைவரும் நெல்லுச்சோறு கொண்டு வந்திருக்க அழகர்சாமி மட்டும் கம்பஞ்சோறும் கருவாட்டுக் குழம்பும் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து அனைவரும் அவனை எடுத்துக் கொண்டு போகச் சொல்கின்றனர். நீ எடுத்திட்டுப் போடா சாமிக்கு ஆகாததைக் கொண்டு வந்தா சாமி கோபிக்கும் என்று நிராகரித்ததால் அழகர் சாமியின் மனம் வேதனையடைகின்றது. பிறகு அம்மாவிடம் நெல்லுச்சோறு வேணும் என்று அழுகின்றான் நெல்லுச்சோறு கிடைக்காத ஏக்கத்திலே இறந்து விடுகிறான். “போகிற உசிர் அபிலாசையோடு போகக் கூடாது குழிபிணத்தக்குக் கேட்டதெல்லாம் கொடுக்கணும்” என்ற முறையில் நெல்லுச்சோறு கையில் வைத்து புதைக்கின்றனர் (Jeyaprakasham, 1998).

வறுமையானது அவன் உயிரோடு இருக்கும் போது நெல்லுச்சோற்றைக் கொடுக்கவில்லை ஆனால் இறந்தவுடன் கிடைப்பது மிகவும் கொடுமையானதாகும். எனவே வறுமைநிலையானது சிறுவனின் மனதை பாதித்ததோடு மட்டுமல்லாது உயிரையும் பறித்தது. இன்றைய சமுதாயத்தில்

நிலவுகின்ற வறுமை பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவற்றை சிறுவர்களிடம் விளக்கிச் சொல்ல முடியாது என்பதையும்,வறுமையை விளக்கிச் சொல்ல பெற்றோர்களிடம் வார்த்தைகள் இல்லை என்பதையும் நெல்லுச்சோறு என்பது உயர் மட்டத்தினர் மட்டும் உண்ணும் உணவு என்றும் ஏழைகளுக்கு நெல்லுச்சோறு என்பது வெறும் கனவாகத்தான் உள்ளது என்றும் வறுமை சிறுவனை மனரீதியில் பாதிப்படையச் செய்து அவனது உயிருக்கு எமனாக மாறிய நிலையையும் அறிய முடிகிறது.

வறுமை சிறுவர்களுக்கு மனபாதிப்பை ஏற்படுத்துவதேர்டு மட்டுமின்றி தவறான செயல்களைச் செய்யத் தூண்டுகிறது என்பதை பொய்மலரும் என்ற கதையில் இளையவனின் ஆசிரியர் வகுப்பில் புத்தகத்திற்கு பணம் கொண்டு வரச் சொல்லி கண்டிப்பு செய்கிறார்.இந்நிலையில் இளையவன் தன் தந்தையிடம்

"நாளைக்கு பணம் கொடுக்கலைன்னா பள்ளிக்கூடம் போகமாட்டேன" என்று கூறுகிறான் (Jeyaprakasham, 1998). தந்தையால் புத்தகத்திற்கு பணம் செலுத்த இயலவில்லை. வேறுவழியின்றி பள்ளிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது ஆசிரியரின் பலவீனத்தை பயன்படுத்தி புத்தகத்திற்கு பணம் கொடுத்ததாக பொய் கூறுகிறான். வறுமையானது சிறுவனை பொய் கூற வேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளுகிறது என்பதை அறிய முடிகிறது.

## உழைப்பவர்களின் வறுமைநிலை

ஏழை விவசாயிகளுக்கு தம் வாழ்வை பொறுத்தவரையில் அவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அவர்கள் வாழ்வில் உழைப்பின் முழுப்பயனை ஒரு போதும் பெறுவதில்லை. வாழ்நாள் முழுவதும் உழைப்பவர்களின் வாழ்க்கையிலும் வறுமை நிலை ஏற்படுகிறது என்பதை கொசு வலைக்குள் தேனீக்கள் என்ற கதையில்,

நல்லையன் அறுவடை செய்த நெல்லை வீட்டிற்று எடுத்துச் செல்ல போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருக்கிற தருவாயில், "நல்லையா முதலாளியம்மா நீ பணம் பாக்கி கொடுக்கணும்னு உடனே கூப்பிட்டு வரச் சொன்னாங்க" என்று ஆசிரியர் குறிப்பிடுவதன் மூலம் நல்லையனின் உழைப்பு சுரண்டப்படுவதை அறிய முடிகிறது (Jeyaprakasham, 1998).

ஏர்பூட்டி நில் உழுது, நீர் பாய்ச்சி, கதிர் அறுத்து உழைப்பவனுக்குத் தரப்படுவது வயிற்றுக்குச் சோறல்ல. வாய்க்கரிசி தான். மாடா உழைத்தவன் வாழ்க்கையில் பசி வந்திடக் காரணம் அவன் தேடிய செல்வங்கள் வேறு .இடத்தில் சென்று சேர்வதனால் தான்.

"மகிழ்ந்து உழைத்தனர்

உழைப்பவனுக்கு நிலம் என்று சொன்னதும்

அறுவடைக்கு பண்ணையார்"

ஏழை மக்கள் உழைத்தும் அவர்கள் வாழ்க்கையில் மிஞ்சி இருப்பது வறுமை மட்டும் தான் என்பதை ஹைக்கூ கவிதை சுட்டுகிறது (Nirmala Mohan, 2005).

மேலும் வறுமையைக் கண்ட போதெல்லாம் வேதனைக் குரல் எழுப்பியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உழைப்பவர் உலகம் வறுமைக்கு ஆட்படுவதைக் கண்டு உள்ளம் வெதும்பி

"வலியோர் சிலர் எளியோர் தமை

வதையோ புரிகுவதோ என்றும்

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்-அவன்

காணத்தகுந்தது வறுமையாம்-அவன்

பூணத் தகுந்தது பொறுமையாம்"

என்று பாடியுள்ள வரிகள் நல்லையனின் வறுமை நிலைக்கு பொருந்துவதாக உள்ளது (Bharathidasan, 1977).

## பொருளாதாரப் பற்றாக்குறை

பொருளாதார பற்றாக்குறை நிலை உறவுகளைப் பிரிந்து செல்லக் கூடிய அவல நிலையை உண்டாக்கும் என்பதை சரஸ்வதி மரணம் கதை விளக்குகிறது. சோலையப்பனின் அம்மா சரஸ்வதி இறந்து விடுகிறாள்.அவனது சித்தியும் சித்தாப்பாவும் தங்களுடன் சோலையப்பனை அழைத்த செல்வதாக கூறுகிறார்கள். நடுவழியில் கிடைக்கும் தின்பண்டத்தை எதிர்பார்த்து சோலைப்பன். "நா அவங்கக் கூடப் போறேன் எனக் கூறுவது குடும்பத்தின் வறுமைநிலையையும் தின்பண்டத்தின் மீது கொண்ட ஆசையையும் காட்டுகிறது. சித்தியுடன் சென்றும் தனக்குத் தின்பண்டம் கிடைக்காத நிலையில் இப்படின்னா வந்திருக்கவேமாட்டேன்" என்று கூறுவது வீட்டில் உள்ள பொருளாதாரப் பற்றாக்குறை தந்தையை விட்டு பிரியுமளவிற்கு அவனுடைய மனதை மாற்றுகிறது (Jeyaprakasham, 1998).

"வறுமையின் கொடுமையோ அல்லது வர்க்கப் போராட்டத்தின் எழுச்சியினையோ சித்திரிப்பதன் மூலம் ஒரு சிறுகதை ஜீவனுள்ளதாகிவிடுகிறது என்று சுதாகரன் கூறுகிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை உறவுகளை விட்டு பிரியும் அளவிற்கு மனத்தை துணியச் செய்கின்றது" என்பதை அறிய முடிகிறது (Rajkumar, 1982).

## ஏழ்மையிலும் மனஉறுதி

வறுமையில் வாழ்ந்த போதும் தனக்கு வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சாது மனஉறுதியோடு உழைத்தால் வாழ்க்கையில் வெற்றியை அடையலாம் என்பதை கொசுவலைக்குள் தேனீக்கள் கதை விளக்குகிறது. சிறுவயதிலிருந்தே நல்லையன் சொந்தமாக நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தோடு வாழ்கிறான். அதற்காக தனது உடலுக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்கிறான். சம்பாதித்த பணத்தை சேர்த்து வைத்து ஒரு "மூணு ஏக்கர் நிலம் வாங்கியிருக்கேன். நேற்றுக் கிரயம் எல்லாம் எழுதி முடிஞ்சது" ன்று சந்தோசப் பெருக்கில் அனைவரிடமும் கூறுகிறான் (Jeyaprakasham, 1998).

இலக்கியமும் மனித வாழ்க்கையைத் தான் சித்திரிக்கிறது. சிறுகதை இலக்கியம் தனக்கென உரிய கலை வரம்புகளுக்கு உட்பட்டு நின்று அதைச் சித்திரிக்கிறது .என்று சாலினி இளந்திரையன் கூறுகிறார். துன்பம், வறுமை என்று வருந்திக் கொண்டிருந்தால் வறுமையைப் போக்க முடியாது முயற்சித்துப் போராடி மனஉறுதியோடு உழைத்தோமேயானால் வறுமையை அகற்றிவிடலாம் என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

வறுமை சிறுவர்களின் மனதைப் பாதிப்பதோடு மட்டுமின்றி உயிரையும் பறித்துக் கொள்கிறது. சில நேரங்களில் வறுமை ஒழுக்கம் தவறச் செய்கிறது என்பதை 'மூன்றாம் பிறையின மரணம்' 'பொய்மலரும்' கதை விளக்குகிறது. ஒரு நாளின் பெரும் பகுதியும்,வாழ்நாளின் முழுமையும் என வறுமையில் உழல்வோர் உழைத்துக் கொண்டிருந்தாலும் தனது இலட்சியக் குறிக்கோளை கடைசி வரை அடைய முடியாமல் வறுமையால் துன்பப்படுவதை கொசு வலைக்குள் தேனீக்கள் கதையும், வறுமை உறவைப் பிரியும் துணிவை ஏற்படுத்துகிறது என்பதை சரஸ்வதி மரணம் கதை விளக்குகிறது.

## References

Bharathidasan, (1977) Bharathidasan Kavithaikal, Manivasagar Pathippagam, Chennai, India.

Bharathiyar, (1977) Bharathiyar Kavithaikal, Manivasagar Pathippagam, Chennai, India.

Chithalai Chathanar, (1977) Manimegalai Pathiram Petra Kathai, Manivasagar Pathippagam, Chennai, India.

Dasan, N.R., (1987) Azhagar Samiyin Ezhuthukal, Vaanathi Pathippagam, Chennai, India.

Jeyaprakasham, P., (1998) Moondraam Pirai- Sirukadhaikal thoguppu, Agaram, Kumbakonam, India.

Nirmala Mohan, (2005) Ilakkiyamanikal, Vaanathi Pathippagam, Chennai, India.

Rajkumar, S.H., (1982) Tharkala Tamil Ilakkiyam varumaiyum sathiyamum, Christian Literature Society, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License